பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 07 2025 **THURSDAY** **6.30 PM**

<u>மாநிலச் செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - இங்கிலாந்து இடையே வரலாற்று சிறப்புமிக்க தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் இன்று லண்டனில் கையெழுத்தானது.

2. தேசிய கூட்டுறவுக்கொள்கையை மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று புதுதில்லியில் வெளியிட்டார்.

3. மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையின் குழுமத் தலைவர் டாக்டர் நம்பெருமாள் சாமி மறைவுக்கு, முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.

4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

--- *இனி விரிவான செய்திகள்* ---

**<<<<<<<>>>>>>**

இந்தியா - இங்கிலாந்து இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் இன்று கையெழுத்தானது.

அரசு முறைப்பயணமாக இங்கிலாந்து சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திர மோடி முன்னிலையில் லண்டனில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதனைத்தொடர்ந்து பேசிய திரு நரேந்திர மோடி, இந்த ஒப்பந்தம் வரலாற்று சிறப்புமிக்கது என்று குறிப்பிட்டார்.

***<u>(‘Sound Byte - மோடி (1) – 26 ‘Sec.)</u>***

நமது இளையோர், விவசாயிகள், மீனவர்கள் மற்றும் சிறு குறு தொழில் முனைவோருக்கு இந்த ஒப்பந்தம் பயனளிக்கும் என்றும் பிரதமர் கூறினார்.

***<u>(‘Sound Byte - மோடி (2) – 49 ‘Sec.)</u>***

**<<<<<<<>>>>>>**

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் தேசிய கூட்டுறவுக்கொள்கை முக்கிய பங்கு வகிக்கும் என்று மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

இ.ன்று புதுதில்லியில் இக்கொள்கையை வெளியிட்டு அவர் பேசினார்.

“கூட்டுறவு மூலம் வளம்” என்பதை அடிப்படையாக கொண்டு இந்த கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

மதுரை அரவிந்த் கண் மருத்துவமனையின் குழுமத் தலைவர் டாக்டர் நம்பெருமாள் சாமி இன்று காலமானார். அவருக்கு வயது 85.

பத்மஸ்ரீ உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்றுள்ள நம்பெருமாள் சாமி மறைவுக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உட்பட தலைவர்கள் பலர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<>>>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக தலைமையிலான கூட்டணி வெற்றிபெறும் என்று மாநில அமைச்சர் திரு முத்துசாமி கூறியுள்ளார்.

இன்று ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் களைய திமுக அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

நியாயவிலைக் கடைகளில் உணவுப்பொருட்கள் முறையாக சேமித்து வைக்கப்படுகிறதா என்பது குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் அருகே நியாயவிலைக்கடை ஒன்றில் அரிசி மூட்டைகள் கழிவறையில் வைக்கப்பட்டுள்ளது தொடர்பாக வெளியான காணொலி அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏழைகளுக்கு வழங்கப்படும் உணவுப்பொருட்களை சுகாதாரமற்ற வகையில் கழிவறையில் வைத்திருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதற்கு காரணமானவர்கள் மீது திமுக அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு குற்றம் சாட்டியுள்ளார்.

தைலாபுரத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மதுபானக்கடைகளின் எண்ணிக்கை குறைக்கப்படும் என்று அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை என்றார்.

நெடுஞ்சாலைகளில் மதுக்கடைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் திரு ராமதாஸ் தெரிவித்தார்.

**<<<<<<<>>>>>>**

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***Sound Byte – செந்தாமரை கண்ணன் (1) – 18 Sec.)***

நீலகிரி, கோவை, தேனி, தென்காசி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

***Sound Byte – செந்தாமரை கண்ணன் (2) – 33 Sec.)***

கடலோரப் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த ஐந்து நாட்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.

***Sound Byte – செந்தாமரை கண்ணன் (3) – 30 Sec.)***

**<<<<<<<>>>>>>**

*மாவட்டச் செய்திகள்*

தூத்துக்குடியில் உள்ள தூய பனிமய மாதா திருத்தல பேராய பெருவிழா அடுத்த மாதம் 5-ஆம் தேதி கொண்டாடப்படுவதையொட்டி அம்மாவட்டத்திற்கு அன்றைய தினம் உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு மாற்றாக 9-ஆம் தேதி பணிநாளாக கருதப்படும் என்றும் ஆட்சியர் திரு இளம்பகவத் கூறியுள்ளார்.

---------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் வெறிநாய்கள் கடித்ததில் காயமடைந்த 10-க்கும் மேற்பட்டோர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

----------------

ஈரோடு மாவட்டம் குண்டேரிப்பள்ளம் அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

------------------

திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி ராஜகோபாலசுவாமி திருக்கோவில் ஆடிப்பூர விழாவையொட்டி கருட சேவை இன்று வெகு விமரிசையாக நடைபெற்றது.

<<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளி, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 500 மீட்டர் பிரிவில் **Anand Vel Kumar** தங்கப்பதக்கத்தையும், **Aryan Pal Ghuman** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

இப்போட்டியின் ஆடவர் ஜூனியர் பிரிவில் **Anirudhan** -ம், மகளிர் பிரிவில் **Rutva Prakash-**ம் வெண்கலப்பதக்கத்தை வென்றனர்.

-----------

பக்ரைனில் நடைபெற்றுவரும் உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் பங்கஜ் அத்வானி மற்றும் **Aditya Mehta** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

----------------

சுவிட்சர்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் 27 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

------------------

ஆசிய ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Tanvi Sharma** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இந்தோனேஷியாவின் **Solo**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர் 21-19, 21-14 என்ற செட் கணக்கில் சீனாவின் **Si Chen Shi-**ஐ வென்றார்.

இப்போட்டியில், **Vennala Kalagotla, Rounak Chouhan, Ansh Negi** மற்றும் **Pranauv Ram Nagalingam** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

--------------

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ஹூன்னத்தி ஹூடா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 19-21, 21-13 என்ற செட் கணக்கில இந்தியாவின் பி வி சிந்துவை வென்றார்.

--------------

லாவோஸில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் இந்தியாவின் சத்யன் ஞானசேகரன் - ஸ்ரீஜா அகுலா இணையும், **Anirban Ghosh – Krittwika Roy** இணையும் காலிறுதிக்கு முன்னேறியுள்ளன.

----------------

பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான உலக விளையாட்டுப்போட்டிகளின் வில்வித்தை பிரிவில் இந்தியா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஜெர்மனியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் குழு பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா – சீன தைபே-யை வென்றது.

மகளிர் ஐந்தாயிரம் மீட்டர் ஓட்டப்பிரிவில் சீமா இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---------------

மான்செஸ்டரில் நடைபெற்றுவரும் இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்சில் சற்றுமுன்வரை 7 விக்கெட் இழப்பிற்கு 337 ரன் எடுத்துள்ளது.

----------------

உலக **Racketlon** சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான இந்திய அணியின் கேப்டனாக விக்ரம் ஆதித்யா அறிவிக்கப்பட்டுள்ளார்.

----------------

வாஷிங்டனில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – நியூசிலாந்தின் **Michael Venus** இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<<END>>>>>>**